முஸ்லிம் ஆவணகம்

**ஆண்டறிக்கை 2020 /2021**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | முஸ்லிம் ஆவணகம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0012 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - மே 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | அல்பயான் பவுண்டேசன், பௌசர் மஹ்றுப் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலகநிறுவனம்,ஆவணச்சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 147,125.50<br>2021 - LKR 328,054.38 |

இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்களில் முஸ்லிம்கள் மிக முக்கியமான பிரிவினராவார் சமூக இலக்கியம் சார்செயற்பாடுகளில் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் தமக்கென தனித்துவமான வாழ்வு முறைகளைக் கொண்டுள்ளதோடு தனியான வரலாற்றையும் கொண்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக ஏராளமான எழுத்தாவணங்கள் வெளிவந்திருக்கின்றன. அந்த எழுத்தாவணங்களையும் அவர்களது வாழ்வுமுறைகள் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய ஆவணப்படுத்தலுக்கு எண்ணிம ஆவணப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவது மிகவும் பயனுடையதாகும். அவ்வகையே முஸ்லிம் ஆவணகம் (Muslim Archive) என்பது நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறப்புச் சேகரச் செயற்றிட்டம் ஆகும். முஸ்லிம் ஆவணகத்திற்கான திட்டம் 2008 இல் உருவானது.ஆயினும் போதியளவிலான நிதியின்மை மற்றும் பணியாளர்கள் இன்மை போன்ற காரணங்களால் தொடர்ந்து ஓர் தனிச்சேகரமாக மேற்கொள்வது கடினமாக அமைந்தது. ஆயினும் நூலக சேகர அபிவிருத்தியூடாக சேகரிக்கப்பட்ட ஆவணங்களுள் முஸ்லிம்கள் சார்ந்த ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டு வந்தன.

பின்னர் அவ்வாவணங்கள் தொடர்பான இடைவெளிகள் உணரப்பட்டு மீண்டும் 2019 ஆண்டு முஸ்லிம் ஆவணகம் சார்ந்த ஓர் தனிச்செயற்திட்டமாக முன்னெடுப்பதற்கான செயற்றிட்ட முன்மொழிவு எழுதப்பட்டது. அதன் தொடர்ச்சியில் எண்ணிம அலுவலகர் ஒருவரை நியமித்து முஸ்லிம் ஆவணங்கள் தன்னார்வலர்களால் சேகரிக்கப்பட்டு மின்வருடல் வேலைத்திட்டங்கள் மட்டும் 2020 ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அம்மாதத்திலிருந்து 2021 மே வரை இடம்பெற்றது.

அடைவுகள் **2020**

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆகஸ்ட் | 14 | 2456 |
| 2 | செப்டம்பர் | 09 | 1912 |
| 3 | ஒக்டோபர் | 12 | 4202 |
| 4 | நவம்பர் | 38 | 7362 |
| 5 | டிசம்பர் | 25 | 7846 |
| | மொத்தம் | **98** | **23778** |

2021 ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான அடைவுகள்

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி | 14 | 4830 |
| 2 | பெப்ரவரி | 12 | 5650 |
| 3 | மார்ச் | 44 | 8632 |
| 4 | ஏப்ரல் | 37 | 5,034 |
| 5 | மே | 19 | 2,524 |
| | மொத்தம் | **126** | **26,670** |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- இரு ஊழியர்கள் எண்ணிப்படுத்தலுக்கான ஆவணங்களை பகிர்ந்து கொண்டமை ( முஸ்லிம் ஆவணகம், சேகர அபிவிருத்தி) . மின்வருடுவதற்காக ஆவணங்கள் அதிகமாகவே கள ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டன. அதனால் ஏனைய செயற்பாடுகளினை முன்னகர்த்துவது ஓர் சவாலாக அமைந்தது.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாக பெறுவதால் Recorder ஒன்றினை பயன்படுத்துவதால் ஏற்பட்ட கால தாமதம்.
- கணிணி , புகைப்படக்கருவி பொதுவானதாக இருந்தமையால் அவை தொடர்பாக ஏற்பட்ட அடைவுகள் சார்ந்த சிக்கல்கள்

- பதிவேற்றல் காப்புப்படிக்கான பின்னூட்டல்களை வழங்குவதில் தாமதம் இவை பரிந்துரை செய்யப்பட்டும் அதற்கான முன்னகர்த்தல்கள் தாமதமானமையும் மனிதவளப் பற்றாக்குறையும்.
- நிதி சேகரிப்பு ஓர் பெரும் சவாலாக அமைந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- நிதிசேகரிப்பதற்கான புதிய திட்டங்களை மேற்கொள்ளல் மாதந்தம் அவற்றை முன்னகர்த்துவதற்கான கலந்துரையாடல்களை தொடருதல்.
- மேலதிக பதிவுக்கருவி, கணணி, புகைப்படக்கருவி  வேறு மாவட்டங்களுக்கு செல்வதற்கான பயண செலவீனங்களை  நிதிப்பங்காளர்களிடம் பரிந்துரை செய்தல் அவசியம்
- ஊழியர்களுக்கு வாய்மொழி வரலாறு, ஆய்வு சார்ந்த பின்புலங்களை உருவாக்குதல் புதிய ஆய்வுகளை இனங்காணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- வாய்மொழி வரலாற்றுக்கான நிறுவனத்திற்கான கையேடு ஒன்றினை விரைவாக உருவாக்குதல்
- கள ஆய்வாளகளுக்கான பயிற்சிக்குறிப்பு தொடர்பாக சப்னா இக்பால் அவர்களால் உருவாக்கப்பட்ட பயிற்சிகளை விரிவுபடுத்தல். கையேடாகவும் வரையறுக்கலாம்.
- சவால்கள் அனுபவங்களுக்கான உடனடித்தேவைகளை நிவர்த்தி செய்தல்.
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உள்ளீர்க்க முடியும்.

பின்னிணைப்புக்கள்
முஸ்லிம் ஆவணகம்